# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம். பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035
தொலைபேசி எண். 044 - 2951 5590

**ஆணை நாள் 09.06.2025**

**முன்னிலை**

**திரு முகம்மது ஷகீல் அ்ஃதர், இகாப (ஓய்வு)**
**மாநில தலைமை தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். CP 4571/SCIC/2022**

திரு வாராகி புகார்தாரர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர்/
அரசு சார்பு செயலாளர்,
பொது (SC)த் துறை, --- பொது அதிகார அமைப்பு
தலைமைச் செயலகம்,
சென்னை 600 009

**ஆணை**

மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 6(1)-ன்கீழ், 04.11.2022 தேதியிட்டு பொதுத் தகவல் அலுவலர், தலைமைச்செயலகம், சென்னை என்ற முகவரிக்கு அனுப்பிய மனுவில், 27.09.2022 அன்று சுற்றுச்சூழல் காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறையின் கூடுதல் தலைமை செயலாளர் திருமதி சுப்ரியா சாஹீ, இ.ஆ.பா., அவர்கள் மீது அளித்த புகார் மனுவின் மீது மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை விவரம் மற்றும் நடவடிக்கை எடுக்கப்பட்ட அதிகாரியின் பெயர் விவரங்கள் ஆகிய தகவல்களை வழங்குமாறு கோரியுள்ளார். மனுதாரரின் மனுவானது தலைமைச் செயலக பொது (தபால்)த் துறையின் பொதுத் தகவல் அலுவலரால் சட்டப்பிரிவு 6(3)ன் கீழ் 24.11.2022 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக பொதுத் தகவல் அலுவலர், பொது (SC)த் துறை, தலைமைச் செயலகம், சென்னை

என்ற முகவரிக்கு மாற்றம் செய்யப்பட்டு, அதன் விவரம் மனுதாரருக்கும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2. பொது (SC)த் துறை பொதுத் தகவல் அலுவலரால் மனுதாரருக்கு எந்தவித தகவல்களும் வழங்கப்படவில்லை. அதன்பின்னர் மனுதாரர் 23.12.2022 தேதியிட்டு சட்டப்பிரிவு 18(1)ன் கீழ் புகார் மனுவை ஆணையத்திற்கு அனுப்பியுள்ளார். மனுதாரரின் புகார் மனுவானது CP 4571/2022 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில் இந்த புகார் மனுவின் மீது நேரடி விசாரணை மேற்கொள்ளும் பொருட்டு 09.06.2025 அன்று நடைபெறும் தமிழ்நாடு தகவல் ஆணைய நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு தெரிவித்து மனுதாரருக்கும், பொதுத் தகவல் அலுவலருக்கும் ஆணையத்தால் விசாரணை அறிவிப்பு அழைப்பாணைகள் அனுப்பப்பட்டது.

3. இன்றைய விசாரணைக்கு மனுதாரர் ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பில் திருமதி E. அமுதா, பொதுத் தகவல் அலுவலர் / சார்பு செயலாளர், பொது (SC)த் துறை, தலைமைச் செயலகம் ஆணையத்தில் நேரில் ஆஜரானார்.

4. பொதுத் தகவல் அலுவலர் மனுதாரரின் 04.11.2022 தேதியிட்ட சட்டப்பிரிவு 6(1)ன் கீழான மனுவிற்கு 05.12.2022 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக பதில் வழங்கப்பட்டுள்ளதாகவும், அதில் மனுதாரரின் 27.09.2022 தேதியிட்ட புகார் மனுவானது தங்கள் அலுவலகத்தில் பெறப்படவில்லையென்று தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் எடுத்துரைத்தார். ஆனால் மனுதாரர் தனது 27.09.2022 தேதியிட்ட புகார் மனுவானது பொதுத் தகவல் அலுவலரின் அலுவலகத்தில் பெறப்பட்டதற்கான அஞ்சல் துறையின் ஆதாரம் தன்னிடம் இருப்பதாக விசாரணையின்போது தெரிவித்தார்.

5. எனவே, **மனுதாரரின் 27.09.2022 தேதியிட்ட புகார் மனுவானது பொதுத் தகவல் அலுவலரின் அலுவலகத்தில் பெறப்பட்டதற்கான அஞ்சல் துறையின் ஆதாரத்தினை இவ்வாணை கிடைக்கப்பெற்ற ஒரு வார காலத்திற்குள் ஆணையத்தில் சமர்ப்பிக்குமாறு மனுதாரருக்கு அறிவுறுத்தப்படுகிறது.**

6. **ஆணையத்தின் உத்தரவிற்கிணங்க மனுதாரரின் புகார் மனு பொதுத் தகவல் அலுவலரின் அலுவலகத்தில் பெறப்பட்டதற்கான அஞ்சல் துறையின் ஆதாரத்தினை ஆணையத்தில் மனுதாரரால் சமர்ப்பிக்கும்பட்சத்தில், மேற்படி நகல் பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையத்திலிருந்து அனுப்பப்படவேண்டும். அக்கடிதம் பெறப்பட்ட ஒரு மாதகாலத்திற்குள் பொதுத் தகவல் அலுவலர் இதுகுறித்து விசாரணை மேற்கொண்டு மனுதாரர் குறிப்பிடும் 27.09.2022 தேதியிட்ட புகார் மனுவானது துறையின் பொதுத் தகவல் அலுவலருக்கு சமர்ப்பிக்கப்படாததற்கு பொறுப்பான அலுவலர் யார் என்பதைக் கண்டறிந்து, அவர் மீது நடவடிக்கை மேற்கொள்ளவும், அவ்வாறு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை குறித்த விவரத்தினை ஆணையத்திற்கு அனுப்பிவைக்குமாறும் பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையத்தால் உத்தரவிடப்படுகிறது.**

7. **மேலும் மனுதாரர் தனது புகார் மனு பொதுத் தகவல் அலுவலரின் அலுவலகத்தில் பெறப்பட்டதற்கான அஞ்சல் துறையின் ஆதாரத்தினை ஒரு வார காலத்திற்குள் ஆணையத்தில் சமர்ப்பிக்காத பட்சத்தில் இப்புகார் மனுவானது மேல்நடவடிக்கை ஏதுமின்றி முற்றாக்கம் செய்யப்படும் என்று ஆணையத்தால் மனுதாரருக்கு தெரிவிக்கப்படுகிறது.**

**ஒம்/-(முகம்மது ஷகீல் அ:தர்)**
**மாநில தலைமை தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவி பதிவாளர்**

**<u>வழக்கு எண். CP 4571/SCIC/2022</u>**

**<u>பொது அதிகார அமைப்பு:-</u>**

பொதுத் தகவல் அலுவலர்/
அரசு சார்பு செயலாளர்,
பொது (SC)த் துறை,
தலைமைச் செயலகம்,
சென்னை 600 009

**<u>மனுதாரர்:-</u>**

திரு வாராகி,
2/3, சுத்தானந்த பாரதி தெரு,
கணபதிபுரம், கிழக்கு தாம்பரம்,
சென்னை 600 059

Copy to: File TK/PS